சார்பு நீதிமன்றம், மேலூர்
நாள்: 11.11.2025
வா.சா.2 – செல்வராஜ் S/o.சுந்தரம்
O.S. No.275/2024
(சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.)
குறுக்கு விசாரணை :

காந்திமதி அழைத்து தான் நான் சாட்சி சொல்ல வந்துள்ளேனா என்றால் இல்லை. காந்திமதியின் மகன் ஜீவானந்தம் அழைத்து தான் நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல வந்துள்ளேன். வழக்கு கடனுறுதி சீட்டான வா.சா.ஆ.1 ஆவணத்தில் 1வது சாட்சி கையொப்பம் நான் தான் போட்டிருக்கிறேன். மேற்படி வா.சா.ஆ.1 ஆவணம் எழுதப்படும் போது 2 பேனாக்களால் பூர்த்தி செய்யப்பட்டது. வா.சா.ஆ.1 ஆவணத்தில் பிரதிவாதியிடம் பணம் கொடுத்த பிறகு எழுதி பூர்த்தி செய்து கையொப்பம் பெற்றார்களா அல்லது எழுதாமல் கையொப்பம் பெற்றார்களா என்றால் பூர்த்தி செய்த பின்னர் தான் கையொப்பம் பெற்றார்கள். வா.சா.ஆ.1 ஆவணத்தை பூர்த்தி செய்தது குணசேகரன் ஆவார். வா.சா.ஆ.1 கடனுறுதி சீட்டில் பூர்த்தி செய்யாமல் பிரதிவாதியிடம் வெற்றுகடனுறுதி சீட்டில் காந்திமதி கையொப்பம் பெற்றார் என்றும் நான் வாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வெற்றுகடனுறுதி சீட்டில் கையொப்பம் பெற்றதால் தான் வெவ்வேறு பேனாக்களால் கையெழுத்து எழுதப்பட்டிருக்கிறது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை.

SAMUNDESWARIPRABHA

Digitally signed by SAMUNDESWARIPRABHA
Date: 2025.11.11 21:40:20 +0530

Sub Judge
Melur